வலயக்கல்வி அலுவலகம் - திருகோணமலை

நான்கு வருட நடுத்தரக்கால அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டம்-தரம் 2,3,4,5 (4Y – MTDP – G2345)
இன் கீழ் முன்னெடுக்கப்படும்
கொவிட்-19 கால மாற்று உபாயக்கல்விச் செயற்றிட்டம்-Ⅲ(COVID- PASEP-Ⅲ)

மாதிரிப் பரீட்சை 02 – 2021

வினாத்தாள் -Ⅱ

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

சுட்டெண் :- .....

நேரம் :- 1மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 46 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன.அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
- செயற்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியாகும்.	

[பக் 2ஐப் பார்க்க]

www.ikeadu.lk

1)பின்வரும் பந்தியை வாசித்து 1 - 6 வரையுள்ள வினாக்களிற்கு விடை தருக.

பெருங்காட்டில் பல பிராணிகள் வாழ்ந்து வந்தன.அங்குள்ள காடுகள் இருள் போல் காட்சியளித்தன. அக்காட்டினுள்ளே சென்று வேடர்கள் வேட்டையாடுவது வழக்கம். அவர்கள் அக்கம் பக்கம் பார்த்து மெதுவாகச் செல்வர்.தமக்கு ஆபத்து வரும் போது தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்வார்கள்.இடையிடையே முட்கள் காலில் குத்தினால் அதனைப் பொருட்படுத்தாது செல்வார்கள்.

1) பிராணிகள் எங்கு வாழ்ந்து வந்தன?

……

2) '**விரைவாக**' என்பதன் எதிர்கருத்து யாது?

……

3) வேட்டையாடுபவர் யார்?

……

4) முள் என்பதன் பன்மைச் சொல்?

……

5) வனங்கள் என்ற சொல்லின் ஒத்தகருத்து யாது?

……

6) பந்தியில் வந்துள்ள இணைமொழி எது?

……

2)உயர்திணை இறந்தகால பன்மை வினைச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

1. ஓடினான் 2. பிரகாசித்தன 3. ஓடினார்கள்

3)தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

1.பார்க்க/ ஒற்றனும்/ பயந்து/ உளவு/ விட்டான்/ அந்த/ ஓடியே/ வந்த

……..

4)பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

1. தம்பி காலையில் பாடசாலைக்குச் சென்றாள். (…..)
2. ஆசிரியர் கூறிய அறிவுரைகள் மனதில் பதிந்துள்ளன. (……)
3. எறும்பு தேவையான உணவுகளைச் சேகரித்து வைத்தன. (……)
4. அன்னங்கள் குளத்தில் நீந்துகின்றன. (……)

[பக் 3ஐப் பார்க்க]

www.lkedu.lk

சுட்டெண் :- .....

5)**பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

சங்கர் தனது தாயைப் பார்த்து நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள் தானே எனக் கேட்டான்

6)1.**பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

வல்லவனுக்குப் புல்லும் .....

2.**பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பாழமொழியை புள்ளிக்கோட்டில் எழுதுக**.

ஒற்றுமையே பலம்

.....

7)**பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**

1. எமது நாடு (வளம்/வழம்) நிறைந்த நாடாகும்.
2. அந்த வயலில் (கோரை/கோறை)ப்புற்கள் நன்கு வளர்ந்திருந்தன.

8)**பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.**

1. மாணவர்கள் பந்தடித்து விளையாடுகிறார்கள்

   .....

2. பெண்பால் சொல்லை எழுதுக.

   குணவான் : .....

9)**கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் தடித்த எழுத்தில் காணப்படும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக.**

1. அந்த தனவந்தர் ஏழைக் குடும்பத்தை **கைதூக்கி விட்டார்.**

   .....

2. அவர் தான் செய்த குற்றத்தை **பூசி மெழுகினார்.**

   .....

10)**பின்வரும் பாடலின் அடிகளைப் பூர்த்தி செய்க.**

1. ‘‘என்னால் இது செய முடியாது’’ எனும் ..... பேச்சை விட்டு விடு!
2. ‘‘என்னால் எது செய முடியாது’’ எனும் ஏற்ற ..... கேட்டு விடு!

[பக் 4ஐப் பார்க்க]

www.lkedu.lk

11)**தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக**.

1. Peacock: ……..
2. Mosquito:……

12)**கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

1. My/country/i/love

   …….

2. Watch/want/i/match/a/to

   …….

13)"**தும்ரியஸ்தானய**" என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

……

14)**1. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

அதிபர் வருவாரா?

……..

2.பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

என்ன லமய்.தே பொன்ன.

……..

15) **பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.**

3405 : ……..

16) **4607,3706,4760,3670** ஆகிய எண்களை இறங்கு வரிசையில் எழுதுக.

……

17)

2	8	5
11	14	

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொதுவித்தியாசம் 3 ஆகவுள்ள எண்கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக.

2,_____ , _____, _____ , _____ ……

[பக் 5ஐப் பார்க்க]

www.lkedu.lk

18)கல்விக் கண்காட்சி ஒன்றிற்காக முதலாம் நாள் 5192 நுழைவுச் சீட்டுக்களும்,இரண்டாம் நாள் 4280 நுழைவுச் சீட்டுகளும் விற்பனையாகின.

1. இரண்டு நாட்களிலும் விற்பனையாகிய நுழைவுச் சீட்டுக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

   ……..

2. இரண்டாம் நாள் விற்பனையாகிய நுழைவுச்சீட்டுக்களிலும்.பார்க்கமுதலாம் நாள் விற்கப்பட்ட நுழைவுச்சீட்டுக்கள் எத்தனைந அதிகமானது?

   ……

19)16 நெல்லிக்காய்களில் ¾ எத்தனை நெல்லிக்காய்கள்?

……..

20)848 இனை 8 இனால் வகுக்கும் போது விடை யாது?

……..

21) ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு சோறு சமைக்க 2Kg 500g அரிசி தேவை. அக் குடும்பத்திற்கு உணவு தயாரிக்க மூன்று நாள்களுக்குத் தேவையான அரிசியின் மொத்த நிறை யாது?

…….. Kg ……g

22) கார் ஒன்று கொழும்பிலிருந்து காலிக்குச் செல்ல 7km450m செல்ல வேண்டும்.ஆனால் அக்கார் 3km375m தூரமே சென்றது.அது முழுத்தூரம் சென்று காலியை அடைய இன்னும் எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும்?

…….. Km ……m

23)ஒரு தாங்கியில் 8 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரும் வேறொரு தாங்கியில் 6 லீற்றர் 600மில்லிலீற்றர் நீரும் உள்ளன. இரண்டு தாங்கிகளிலும் உள்ள நீரின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?

……..லீற்றர் ……. மில்லிலீற்றர்

24)24 மணித்தியாலக் கடிகாரம் 15 : 45 எனக் காட்டும் போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது?


……

25)எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்களை உரோம எண்ணில் எழுதுக.

1. நான்கு : …….. 2. ஒன்பது : …….

[பக் 6ஐப் பார்க்க]

www.ikeal.lk

26) 

I) இவ் உருவிற்கு உள்ள முகங்கள் எத்தனை?

……

II)உச்சிகள் எத்தனை?


……

27) பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	ஒரு கிலோகிராமின் விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
சீனி தேயிலை	2Kg 500g	126 ரூ……..	00 ……	ரூ…… 475	…… 00
		மொத்தப்பணம்		**727**	**00**

28) I)இவ் உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்.


……



II)இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதியினை தசம எண்ணாக எழுதுக.

……

29)மாணவர் குழு ஒன்று அதிகமாக விரும்பும் பழம் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



I) கொய்யாப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 6 ஆகும். அதனை வரைந்து காட்டுக.

II) குழுவொன்றில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

……

[பக் 7ஐப் பார்க்க]

www.lkedu.lk

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30)அயடின் குறைவினால் ஏற்படும் நோய் எது?

1. மாலைக்கண் 2.தொண்டைக்கழலை 3.எலும்புருக்கி

31)தேசிய இலச்சினையில் தர்ம சக்கரம் குறிப்பது

1. தன்னிறைவு 2.சௌபாக்கியம் 3.தார்மீகம்

32)தாவர இலைகளைப் பயன்படுத்திக் கூடுகளை அமைக்கும் பிராணி

1. மைனா 2.செவ்வெறும்பு 3.சிலந்தி

33)இலங்கையில் முதன் முதலாகக் கட்டப்பட்ட குளம்

1. பசவக்குளம் 2.மின்னேரியா 3.கலாவாவி

34)காபோவைதரேற்று அடங்கியுள்ள உணவுப் பொருள்

1. நிலக்கடலை 2.பலாக்காய் 3.சோயா

35)பிறருக்கு தன்னலம் கருதாது சேவையாற்றிய ஒருவர்

1. அன்னைதிரேசா 2.ஆனந்தசமரக்கோன் 3.மகாத்மாகாந்தி

36)மனதை ஒரு முகப்படுத்தும் செயற்பாட்டின் 4ம்படி நிலை

1. மனவுறுதி 2.பிரார்த்தனை 3.உடலைத்தளர்த்தல்

37)2018 ஆம் ஆண்டில் இலங்கையில் வைத்து உலக மரபுரிமையாக்கப்பட்ட புனித நூல்

1. யாக்வெல் 2.திருக்குறள் 3.திரிபீடகம்

38)வரண்ட வலயத்தில் செழித்து வளரும் தாவரம்

1. கள்ளிவகை 2.மாகோகனி 3.நாகமரம்

39)சிகிரியாவை கலையம்சம் கொண்டதாக மாற்றிய மன்னன்

1. தாதுசேனன் 2.துட்டகைமுனு 3.காசியப்பன்

40)தலதாமாளிகை அமையப்பெற்றுள்ள மாகாணம்

1. மத்தியமாகாணம் 2.சப்ரகமுவமாகாணம் 3.ஊவாமாகாணம்

41)போத்தல் - பொலித்தின் என்பவற்றை இடுவதற்காகப் பயன்படுத்தும் தொட்டிகளின் நிறங்கள் முறையே

1. சிவப்பு-செம்மஞ்சள் 2.பச்சை-நீலம் 3.நீலம்-சிவப்பு

[பக் 8ஐப் பார்க்க]

www.lkedu.lk

42)நூல் நிலையம் ஒன்றினுள் செய்யக்கூடாத செயல் யாது?

1. சத்தம் இடாமல் புத்தகங்களை வாசித்தல்
2. வாசித்த புத்தகங்களை குறித்த இடங்களில் வைத்தல்
3. வாசிக்கும் புத்தகங்களில் பல்வேறு அடையாளங்களை இடுதல்

43)அதிகளவில் நீரைத் தேக்கி வைத்திருக்கும் மண்

1. களிமண் 2.மணல்மண் 3.ஆற்றுமணல்

44)தேசப்படங்களில் மேட்டு நிலங்களைக் குறித்துக் காட்டப் பயன் படுத்தும் நிறம்

1. பச்சை 2.கபிலம் 3.மஞ்சள்

45)தேனில் இட்டுப் பாதுகாக்கத்தக்க உணவு

1. இறைச்சி 2.மீன் 3.வற்றாளைக்கிழங்கு

46)வலைப்பந்தாட்ட விளையாட்டில் குழு ஒன்றில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை யாது?

1. 6 2. 7 3. 11

47)சாக்குகளில் கட்டி களஞ்சியப்படுத்த வேண்டிய விளைபொருள்

1. பப்பாசிப்பழம் 2.நெல் 3.வாழைப்பழம்

48)தொற்றுநோய் பரவுவதற்குக் காரணமாக அமையாதது.

1. வைரஸ் 2.டெங்குநுளம்பு 3.பல்லி

49)நீரைச் சுத்திகரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்

1. கரித்துண்டு 2.மணல் 3.குளோரின்

50)வதிவிடச் சான்றிதழ் பெற நாம் முதலில் செல்ல வேண்டியது

1. கிராம சேவகர் 2.பிரதேச செயலாளர் 3.பொதுச் சுகாதார பரிசோதகர்

51)கண்,காது ஆகிய இரண்டு ஊடகங்கள் மூலம் தகவல் பெறும் சாதனம்

1. வானொலி 2.பத்திரிகை 3.தொலைக்காட்சி

52)காற்றினைப் பயன்படுத்தி இயக்கப்படும் கருவி யாது?

1. புல்லாங்குழல் 2.தாளம் 3.மிருதங்கம்

53)நீல நிறத்தையும்,மஞ்சள் நிறத்தையும் கலக்கும் போது உண்டாகும் நிறம் யாது?

1. வெள்ளை 2.பச்சை 3.ஊதா

[பக் 9ஐப் பார்க்க]

www.lkedu.lk

54)இல்லத்திற்குக் குழாய் நீர் வசதியைப் பெறச் செல்ல வேண்டிய இடம்.

1. இலங்கை மின்சார சபை
2. பிரதேச செயலகம்
3. நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை அலுவலகம்

55)எமக்கு இலவசமாகக் கிடைக்கக் கூடிய சேவைகள்

1. சுகாதாரம்,கல்வி 2.மருத்துவம்,மின்சாரம் 3.தபால்,போக்குவரத்து

56)வாகனச்சாரதிகள் எப்பக்கம் வாகனங்களை செலுத்தவேண்டும்.

1. வலதுபக்கம் 2.இடதுபக்கம் 3.பாதையில்நடுவே

57)காய்களைத் தோற்றுவிக்காத பூ எது?

1. வேப்பம் பூ 2.நித்தியகல்யாணிப்பூ 3.பாகல் பூ

58)அல்பனா ஆக்கம் செய்யப் பயன்படுவது?

1. வித்துக்கள் 2.பூக்கள் 3.இலைகள்

59) ‘‘சைனோபாம்’’ எனும் தடுப்பூசி எந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி ஆகும்.

1. போலியோ 2.கொரோனா 3.ஆஸ்துமா

60) ‘‘**நான் விரும்பும் பெரியார்**’’ என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு [வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்]

1. ……

   ……

2. ……

   ……

3. ……

   ……

www.lkedu.lk